விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24

ஒலி 038 வள்ளுவர் ஆண்டு 2054 தை 12 வியாழக்கிழமை (26.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



### தரம் 5 புலமைப்பரிசில்
## பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த

11

### பெப்ரவரி 17ஆம் திகதிவரை
## நாட்டில் மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரையில் மின்வெட்டினை மேற்கொள்ளாமல் இருக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று பிற்பகல் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நடத்திய விசேட கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நிறைவடையும் பெப்ரவரி 17ஆம் திகதி வரையில் நாட்டில் மின்வெட்டு முன்னெடுக்கப்படாது என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

### ஜனாதிபதி தலைமையில்
# சர்வகட்சி கூட்டம் இன்று
### சகல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக முன்னெடுக்கப்படும் இக்கூட்டத்தில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## 6 அத்தியாவசிய பொருட்களின்
### விலை மீண்டும் குறைப்பு

(கொழும்பு)

சதொச நிறுவனம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 6 அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த விலைக் குறைப்பு இன்று முதல் அமுலுக்கு வரும் என சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

11

## வவுனியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் தட்டாங்குளம் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

செட்டிகுளம் பகுதியில் இருந்து பூவரசங்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபர் தட்டாங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எதிரே

11

## புற்றுநோயாளிகளுக்கான 43 மருந்துகள் உட்பட
### 140க்கு மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் உட்பட 140க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

11

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் சார்ள்ஸ்
### பதவி விலகினார்



(கொழும்பு)

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

11

## சரணடைந்த புலிகள் தொடர்பில் விளக்கமளிக்க
### இராணுவத்துக்கு உத்தரவு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் தொடர்பில் நேரடியாகவே முன்னிலையாகி விளக்கமளிக்கவேண்டுமென இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் ஒருவரினால் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பில்

11

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவை எதிர்க்கும் மனு
### 6ஆம் திகதி விசாரணைக்கு பிரதிவாதிகளுக்கும் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வரின் தெரிவு சட்டவிரோதமாக இடம்பெற்றதாக தெரிவித்து மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு

11

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனப்பிரச்சினையை தீர்ப்பதாக கூறி

# ஜனாதிபதி தமிழ் சமூகத்தையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகிறார்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

**நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச் சினைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் சமூகத்தையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகிறார். இவரது ஏமாற்றுச் செயற்பாடுகளில் பங்காளியாக முடியாது என்பதால் இன்று இடம்பெறும் சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை. அதிகாரத்தை பகிர்வதாக குறிப்பிட்டுக்கொண்டு நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகளை தோற்றுவிப்பதை ஜனாதிபதி தவிர்த்துக்கொள்ள வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

சர்வகட்சித் தலைவர் கூட்டம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதை ஏற்றுக்கொண்டோம்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. ஜனாதிபதிதலைமையில் கடந்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் உண்மை நோக்கத்துடன் கலந்துகொண்டேன்.

தமிழ் மக்கள் மத்தியில் சமஷ்டி பற்றி கருத்துரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் சமஷ்டி தொடர்பில் கருத்துரைக்கவில்லை. அதிகாரப் பகிர்வு விவகாரம் தேர்தல்கால பிரசாரமாகவே காணப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுகிறார்.

உண்மை நோக்கத்துடன் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை. ஜனாதிபதியின் ஏமாற்று செயற்பாடுகளில் பங்காளியாகக் கூடாது என்பதால் ஜனாதிபதி தலைமையில் இன்று இடம்பெறும் சர்வகட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் வெற்றிக்காக இனப்பிரச்சினை விவகாரத்தை பயன்படுத்திக்கொள்கிறார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தான் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. நல்லாட்சிஅரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு சட்ட சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தன் பின்னணியில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படக்கூடாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவுசெய்துகொள்வார்கள். மாகாண சபை தேர்தலை நடத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஜனாதிபதி செயல்படக்கூடாது என்றார். (ம-7)

## நாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில் மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துக

### ஜே.வி.பி. தலைவர் அநுர

பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில் மக்களிடையே முதலில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க புதிய அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

இன்னொரு தரப்பினர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட கதிரையின் பாரத்தை சுமக்கும் அளவுக்கு எமது தலைவர்களின் மனதளவில் வலிமையானவர்கள் கிடையாது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமை இல்லாத, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சி தாவமுடியாத, அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்திய, மனித உரிமையை வலுப்படுத்தக்கூடிய, சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களுக்கு முழு உரிமையுடன் வாழக் கூடிய புதிய அரசியலமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டே ஆக வேண்டும் என்றார். (ம-7)


31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 21.10.1953 உதிர்வு 27.12.2022

அமரர் யோகேஸ்வரன் ஜெயக்குமார்

(முன்னாள் உதவிப் பதிவாளர் யாழ்.பல்கலைக்கழகம்)

“தன்துன்பம் பிறர்துன்பம் சமனாக
சுமந்த குமார் உன்துன்பம் சுமப்பதற்கு
பூவுலகில் யாருளரோ”

என்றும் உன்னுடன் – நண்பர் குழாம்
வினோபா நூலகம் – வினோபா நகர் கச்சாய். (C-5846)

31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 01.02.1933 உதிர்வு 27.12.2022

அமரர் வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை

(முன்னாள் கொடிகாமம் ப.நோ.கூ சங்க முகாமையாளர்)

“கறைபடியாத உன் கரங்கள் இரண்டும்
கூட்டுறவுத் துறையின் இரு கண்களாக
என்றும் அமையட்டும்.”

என்றும் உன்னுடன் – ச தம்பு வினோபா நூலகம்
நண்பர் குழாம் – வினோபா நகர் கச்சாய். (14400)


## மனித கடத்தலை தடுக்க இலங்கைக்கு ஹெலிகொப்டர்

### இத்தாலி குடியரசு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக ஹெலிகொப்டர்களை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு உதவ இத்தாலி குடியரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

இத்தாலியத் தூதுவர் ரீட்டா கியுலியாணா மன்னெல்லா, ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இதனை வெளிப்படுத்தினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கநேற்று ஜனாதிபதி செயலகத்தில். இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடியதுடன், கலாசார பரிமாற்றங்கள், சுற்றுலா மேம்பாடு, சாத்தியமான முதலீடுகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் இந்த சவாலான காலங்களில் இலங்கைக்கு இத்தாலி எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கரு’வுக்கு விருது

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு இலங்கையின் உயரிய தேசிய விருதான ஸ்ரீலங்காபிமன்ய விருது வழங்கப்படவுள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதை பெறும் எட்டாவது நபர் என்ற பெருமையை 82 வயதான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பெற்றுள்ளார்.

1986 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இந்த விருதினை முதன் முதலிலும் 2017 ஆம் ஆண்டு டபிள்யூ.டி.அமரதேவ இறுதியாகவும் இந்த விருதினைப் பெற்றிருந்தனர்.

பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விருதை கரு ஜயசூரியவிற்கு வழங்கவுள்ளார்.

2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நெருக்கடி சந்தர்ப்பத்தில் முக்கிய பங்கு வகித்தமைக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் பொதுப் பதவியிலிருந்து விலகி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலை ஒத்திவைத்தால் போராட்டம் வெடிக்கும்

## சரத் பொன்சேகா எச்சரிக்கை

**(கொழும்பு)**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்தவிடாமல் அதனை அரசாங்கம் ஒத்திவைத்தால் மக்கள் போராட்டம் நாடெங்கும் வெடிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு இல்லாதவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு தோல்வி ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அவர் முயற்சிக்கின்றார். திட்டமிட்ட திகதியில் தேர்தலை நடத்தாவிடின் மக்கள் அனைவரும் வீதியில் இறங்குவார்கள்.

முப்படையினரைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தை அடக்கலாம் என ரணில் விக்கிரமசிங்க எண்ணுவாரானால் அதைவிட முட்டாள்தனம் வேறு ஒன்றும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)



# தேர்தலுக்கு போதிய நிதி வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளுக்கு போதியளவு உதவிகளை வழங்குமாறு கோரி மத்திய வங்கி ஆளுநருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

எரிபொருள் மற்றும் மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு தேவையான பணத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அஜித் நிவாட் கப்ரால் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தினியாவல பாலித தேரர் தாக்கல் செய்த தனிப்பட்ட வழக்கை அவர் திரும்ப பெற்றுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபரான அஜித் நிவாட் கப்ராலை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கோட்டை



நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார். (நி)

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் மோசமாக பாதிப்படையும் சுகாதாரத்துறை

## உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

இலங்கை முன்னொரு போதும் இல்லாத சுகாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. மிகவும் அவசியமான மருந்துகள் குறைந்தளவிலேயே உள்ளன என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடி சுகாதாரத் துறையை மோசமாகப் பாதிப்பதால் பல இலங்கையர்கள் மருத்துவ சேவையை பெறும் வாய்ப்பை இழக்கின்றனர் என தெரிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம், மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் அதிகரித்துவரும் தட்டுப்பாடு காரணமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி துரிதமாக சுகாதார நெருக்கடியாக மாறி வருகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

மருந்துகள் மற்றும் சத்திர கிசிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான வருடாந்த வரவு-செலவுதிட்ட மதிப்பீடு 300 மில்லியன் டொலர்கள். 2023 இல் இது வரை இலங்கைக்கு உதவி வழங்கும் சமூகத்தின் மூலம் 80 மில்லியன் டொலர்களே கிடைத்துள்ளன.

அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கைக்கு இன்னமும் 220 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையாகவுள்ளது. இலங்கையின் சகாக்களுடன் இந்த இடைவெளியை அவசரமாக நிரப்ப வேண்டிய தேவையுள்ளது எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (நி)

# வணிகங்களுக்கு கடன் நிவாரணம் வழங்க முடியாது

## மத்திய வங்கி ஆளுநர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு துறைகளைச் சேர்ந்த வணிகங்கள் இன்னும் கடன் நிவாரணங்களை எதிர்பார்க்கும் நிலையில் வங்கித்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய நடைமுறையை தொடர்ச்சியாக ஊக்குவிப்பதில்லையென மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வணிகங்கள் மீட்சியை நோக்கி நகர்வதற்கான வேறு வழிகளை ஆராய வேண்டும் என்றும் வங்கிகளில் தொடர்ந்தும் சார்ந்திருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் “இலங்கை பொருளாதாரக் கண்ணோட்டம் 2023” வெளியீட்டு நிகழ்வின் போது நாட்டின் தனியார் துறை வர்த்தகத் தலைவர்களிடம் ஆளுநர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடனை செலுத்துவதில் நிவாரணம் கேட்கும் முக்கிய துறைகளில் சுற்றுலாவும் ஒன்றாகும்.

இந்தநிலையில், சுற்றுலா துறையை மீட்டெடுப்பது சுற்றுலாவை மேம்படுத்துவதில் இருந்து வர வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், நாட்டின் நிதி அமைப்பின் ஸ்திரத் தன்மையை



பேணுவது முக்கியமானது.

இந்தநிலையில் வணிகங்கள் தொடர்பில் கடன் நிவாரணம் என்ற இடைக்காலத் தடையைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக முடிந்தவரை கடனை மறுசீரமைக்குமாறு மத்திய வங்கி, வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார். (நி)

# சந்தையில் மீண்டும் முட்டைக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சந்தையில் மீண்டும் முட்டைக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள நிலையில் இந்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த நிலையில் முட்டைகளை பதுக்கி வைத்திருப்பவர்களைத் தேடி நுகர்வோர் விவகார அதிகார சபை சோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி முட்டைக்கு அதிகபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இதன்படி, வெள்ளை முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவும் சிவப்பு முட்டைக்கு 46 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டது.

நிர்ணய விலைக்கு அதிகமாக முட்டை விற்பனையில் ஈடுபடும் சாதாரண வர்த்தக நிலையமாயின் ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையும் நிறுவனம் ஒன்றாயின் 5 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபாய் வரையும் அபராதம் விதிக்கப்படும்.

இதேவேளை, உள்நாட்டில் முட்டையின் உற்பத்திச் செலவு குறைக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் முட்டையின் விலை குறைய வாய்ப்புள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இந்தியா



நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் கைப் பற்றியது.

நேற்று முன்தினம் நடை பெற்ற மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியில் 90 ஓட்டங்கள் வித்தியாச த்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முத லில் இந்திய அணியை துடுப்பெடுத்தாட அழைத்த நிலையில் முதலில் கள மிறங்கிய இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 385 ஓட்டங்களை பெற்றது.

அவ்வணி சார்பாக சுப்மன் கில் 112 ஓட்டங் களையும் ரோஹித் சர்மா 101 ஓட்டங்களையும் ஹர்திக் பாண்டியா 54 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இதனை தொடர்ந்து 386 என்ற வெற்றி இலக்கோடு கள மிறங்கிய நியூசிலாந்து அணி 41.2 ஓவர்கள் நிறை வில் அனைத்து விக்கெட்டுக ளையும் இழந்து 295 ஓட்ட ங்களை பெற்றுக் கொண்டது.

நியூசிலாந்து அணி சார் பாக டெவோன் கொன்வே 138 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக்கொடு த்தார். (4)

# ஐ.சி.சி ஒருநாள் கிரிக்கெட்; முதலிடத்தில் இந்தியா



இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் மூன்று போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று 3-0 என நியூசிலாந்தை வையிட் வாஷ் செய்துள்ளது. இந்த வெற் றியைத் தொடர்ந்து ஐ.சி.சியின் ஒருநாள் கிரிக்கெட் தர வரிசையில் இந்திய அணி, இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளி முதலிடத்திற்கு முன்னேறியது. இந்தியா 114 தரநிலை புள்ளிகளுடன் முத லிடத்தில் உள்ளது.

இங்கிலாந்து 113 புள்ளி களுடன் இரண்டாம் இடத்திலும் அவுஸ்திரேலியா 112 புள்ளிக ளுடன் மூன்றாமிடத்திலும் உள்ளன.

நியூசிலாந்து அணி 111 புள்ளிகளுடன் 4 ஆம் இடத்திற்கு பின் தங்கியது. தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப் பற்றினால், தரவரிசையில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளும். (4)

# இலங்கை'ஏ' அணிக்கு குசல் ஜனித் பெரேரா

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதி ரான இலங்கை "ஏ" அணி க்கு குசல் ஜனித் பெரேரா உட்பட பல வீரர்கள் அழை க்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நியூசிலாந்து சுற்றுப் பயணத்திற்கு தயா ராகும் வகையில் வீரர்கள் "ஏ" அணிக்கு அழை க்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறி வித்துள்ளது.

இதன்படி, குசல் ஜனித் பெரேரா, பெத்தும் நிஸங்க, சரித் சசங்க, சாமிக கரு ணாரத்ன, ஏஞ்சலோ மத்தி யூஸ், துனித் வெல்லகே, சதீர சமரவிக்ரம, லக்ஷான் சந்தகன், விஷ்வ பெர் னாண்டோ, பிரமோத் மதுஷன், நுவன் துஷார, கவிஷ்க அஞ்சுல, அவிஷ்க பெர்னாண்டோ, சமிர த்மன் பெர்னாண்டோ ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2753

குகப்பிரியா





மதுரா




கஜானன்




அபிலாஸ்




தட்சாயினி




ஜெகனியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) 18.01.2023

# சேவை நலன் பாராட்டு விழா

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



பளை மத்திய கல்லூரியில் அதிபராக இருந்து பணியாற்றியதை நன்றியுணர்வுடன் பாராட்டி மலர் வெளியிடுவது அனைவருக்கும் மனமகிழ்ச்சியினை தருகிறது. புனிதமான கல்விப்பணியை அனைவருக்கும் கல்வி எனும் வகையில் எல்லோரையும் கல்வியாளர்களாக்கும் இந்த பாடசாலைகளில் கிளி.பளை மத்திய கல்லூரியில் திரு.க.உதயகுமாரன் சிறப்பாக பணியாற்றியமையினை இட்டு அனைவரும் சேர்ந்து விழா எடுத்து மலர் வெளியிடுவது கல்விசார்ந்த அனைவருக்கும் மனமகிழ்ச்சியினை தருகிறது. திரு.க.உதய குமாரனது பணிகள் தொடர இறையருளை வேண்டுகிறேன். இந் நிகழ்ச்சி சிறப்பு செய்கின்ற அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி பாராட்டுகிறேன்.
"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்.**

## அருட்பணி S.A ஜோர்ஜ் அடிகளாரின் ஆசிச் செய்தி



உலக மாற்றங்கள், சவால்களுக்கு முகம்கொடுக் கக் கூடிய பிரஜைகளை உருவாக்கும் கல்விப் பணி மகத்தானதாகும். கல்விப்புலமானது காத்திரம் மிக்க முகாமைத்துவக் கட்டமைப்பைக் கொண்ட மைந்த போதிலும் மாணவர்களுக்கு தரமான கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் இலக்கை எட்டுவதில் பாடசாலை அதிபர்களின் கடமை மிகை வலிதாகும்.
வாஞ்மை நிறைந்த ஆசான்களையும் பல்வகைமை மாணவர்களையும் ஒன்றிணைத்து ஈடுபடுத்தி தரமிக்க வெளியீடுகளைத் தர முன்னின்று செயலாற்றுபவர் அதிபர்.
மணிவிழா காணும் அதிபர் திரு.க.உதயகுமார் அவர்களை உளம் நிறைந்து வாழ்த்துவதுடன் ஓய்வுக் காலத்தில் நல்லாயனாக, சமூக வழிகாட்டியாகத் திகழும், உடல் உள ஆரோக்கியத்தோடு குடும்பத் தாருடன் இன்புற்றிருக்கவும் இறையருள் கிடைக்க வேண்டுமென ஆசித்து நிற்கின்றோம்.

**அருட்பணி S.A ஜோர்ஜ் அடிகளார் பங்குத்தந்தை,**
**தூய இராயப்பர் ஆலயம், பளை.**

## மாணவர்களுக்கு கல்வி புகட்டிய சிறந்த அதிபர்



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் முதன்மையாக விளங்குகின்ற பாடசாலையாக திகழ்வது கிளி/பளை மத்திய கல்லூரி. 1952 ஆம் ஆண்டு பளை "யூனியர் பாடசாலை" என்னும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது கல்வி முன்னேற்றத்தில் சிறந்து விளங்குவதற்கு சிறந்த தலைமைத்துவமே முதற் காரணியாக காணப்பட்டது. 2019.02.28 ஆம் திகதி திரு.க.உதய குமாரன் அவர்கள் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.
கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத்தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது. தனி மனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி. இத் தகைய கல்வியினை தனது மாணவர்களிற்கு போதித்து தனது சேவையில் தன்னிறைவு கண்டுள்ளார். இவரது அளப்பரிய சேவை யினை பாராட்டி. தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு.இ.வரதீஸ்வரன்**
**செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மகிமை வாய்ந்த அதிபர் பணிக்குத் தன்னை அர்ப்பணித்த திரு.க.உதயகுமாரன் அவர்கள் மாணவச்செல்வங்களை மதிப்பு வாய்ந்த பிரஜைகளாக ஆக்கும்பணியை மேற்கொண்டு 23 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றித் தனது அறுபதாவது வயது நிறைவுற்ற பின்னரும் சேவைபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இவரது அயராத சேவை பாராட்டப்பட வேண்டியது.
நீண்டகால யுத்தத்திற்கு பிற்பாடு மீள அபிவிருத்தி அடைந்து வரும் எம் சமூகத்தைச் சிறப்பான முறையில் முன்னேற்றுவதற்கு அரும் பாடுபட்டவர். குறிப்பாக சிறார்களின் கல்வி அபிவிருத்தி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று விரும்பும் ஒருவர். ஓய்வுக் காலத்திலும் இன்றைய சமுதாயத்தின் தேவை கருதி தமது அறிவை, ஆளுமையை பயன்படுத்திப் பல சமூகசேவைகளில் ஈடுபடுதல் வரவேற்கத்தக்கது. அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும், பணிகள் தொடரவும், ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜோன் குயின்ரஸ்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.**

## ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி...



திரு.க.உதயகுமாரன் அவர்கள் தான் கற்ற பாடசாலையில், தன்னை கல்வியில் திகழ வைத்த பாடசாலையில் அவருக்கு பணியாற்றக் கிடைத்தது பெரும்பேறு எனலாம்.
கல்லூரியினைப் பொறுப்பெடுத்த போது என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ அத்தனை கனவுகளையும் நனவாக்கி தான் கற்ற கல்லூரியினை தேசிய பாடசாலையாக மிளிரச் செய்ததோடு தானும் தேசிய பாடசாலை அதிபராக தனது சேவைக் காலத்தின் இறுதிப்பகுதியில் உயர்வடைந்து நிறைவான சந்தோச த்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் எம் அதிபரை மனதார வாழ்த்து வதோடு தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல பச்சிலைப் பள்ளியப்பர் திருவருள் புரிவாராக.

**திரு.மு.பத்மருபன், தலைவர்,**
**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்.**



அதிபர் உயர்திரு.
கணபதிப்பிள்ளை உதயகுமாரன் (SLPS-I)

## MR.K.Uthayakumaran (Principal) - SERVICE DETAILS

| SNo | Name of Institution | Designation | From | To |
|---|---|---|---|---|
| 1 | Kn/Kariyalai Nagapaduvan No 1 GTMS | Asst. Teacher | 06.08.1988 | 31.12.1989 |
| 2 | Palaly Teacher Traning College | Teacher Trainee | 01.01.1990 | 31.12.1991 |
| 3 | Kn/Kariyalai Nagapaduvan No 1 GTMS | Teacher | 01.01.1992 | 31.01.1992 |
| 4 | Kn/Kariyalai Nagapaduvan No 11 GTMS | Teacher | 01.02.1992 | 31.12.1992 |
| 5 | KN/Pallai Central College | Teacher | 01.01.1996 | 11.05.1997 |
| 6 | KN/Soran pattu Ganesh Vid | Perf. Principal | 12.05.1997 | 03.08.2000 |
| 7 | KN/Soran pattu Ganesh Vid | Principal | 04.08.2000 | 28.01.2009 |
| 8 | J/Kudamiyan GTMS | Principal | 29.01.2009 | 30.11.2011 |
| 9 | J/Kachchai GTMS | Principal | 01.12.2011 | 18.11.2015 |
| 10 | J/Madduvil Saraswathy Vid | Principal | 19.11.2015 | 27.02.2019 |
| 11 | KN/Pallai Central College (National School) | Principal | 28.02.2019 | 31.12.2022 |

## பாடசாலை வளர்ச்சியை ஒரே நோக்காக கொண்டவர்....



கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்த க.உதயகுமாரன் அதிபர் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டு பல்வேறு பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களது கல்விக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அதிபர் சேவையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் தென்மராட்சி வலயத்திலும் தனது அதிபர் பணியினை சிறப்பாக ஆற்றியிருந்தார். இப்பாடசாலை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. சாரணர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், சாரணிய இயக்கச்செயற்பாடுகளை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டார்.
கிளி/பளை மத்திய கல்லூரியானது பல வளங்களையும் பெற்று இன்று பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தலைமைப் பாடசாலையாக, தேசிய பாடசாலையாகத் திகழ்கிறது. இவரது சேவைக்காலத்தில் இவர் இப்பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் மறக்கப்பட முடியாதனவாகும். இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உதயகுமார்**
**முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித்திணைக்களம்,**
**வடமாகாணம்.**

## மத்திய கல்வி அமைச்சின் உதவிக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக உள்வாங்கப்பட்ட நாள் முதல் திரு.க.உதயகுமாரன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை தெரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. பாடசாலையின் வளர்ச்சியிலும் அதன் கவின் நிலையை மேம்படுத்துவதிலும் அயராது ஈடுபட்டார்.
தேசிய பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு மற்றும் அண்மையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா என்பவற்றை மிகச் சிறந்த முறையில் திட்டமிட்டு நடத்தி முடித்தமை இவரது கல்விப்பணியில் முத்தான நிகழ்வுகளாகும்.
இவருடைய அருஞ்சேவைகளுக்கு நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவித்து, மனநிறைவோடு வழியனுப்பி வைப்போம். ஓய்வின் பின் நிலையான நலத்தோடும் அன்பான குடும்பத்தோடும் காலத்தை மகிழ்வுடன் கழிக்க இறைவன் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.செல்வராசா சுந்தரலிங்கம்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்,**
**கல்வி அமைச்சு.**
**இசுறுபாய, பத்தரமுல்ல.**

## Greeting From Deputy Director of Education



It is with great pleasure I pen on the Monument book which has been published on the Farewell day of Mr.Kanapathipillai Uthayakumaran (SLPS 1), Principal of Kn/Pallai Central College – National School.
It would be appropriate to share my cherished experiences I was enjoying while working with him both at J/Madduvil Saraswathy Vidyasalai and Kn/Pallai Central College.
While I was working as Deputy Director of Education (Education Management) at Zonal Education Office, Thenmaradchy from 25.01.2016 to 06.03.2018, He was serving as the Principal of J/Madduvil Saraswathy Vidyasalai. During my visit to his School for team Supervision and individual monitoring, I was able to visualize his capacity of leadership and the efficiency of tireless work.
When I was appointed as the Zonal Director of Education for Kilinochchi North Zone on 12.10.2021, I have got the second experience of working with him as Pallai Education division comes under my Zone.
There he successfully presided the successful Programme of declaring Kn/Pallai Central College as a National school by the Guests Hon. Douglas Devananda (Minister of Fisheries) and Mr. Jeevan Thiyagarajah Hon.Governor of Nothern Province on the 7th day of January, 2022.
All these events are the evidences of his commitment and dedication towards the success during my time of working with him. He has come across many challenges during his Service as teacher and Principal throughout his service period. He as an old student of Kn/Pallai Central College was puttting his all efforts to achieve the highest performances in Education Development and extra-curricular activities during his period of 28.02.2019 to 31.12.2022 and succeeded in many events.
I wish him a happy and peaceful retirement and enjoy the time with his beloved family members and relatives which he has sacrificed due to the duty minded during the service period. I am very sure that he deserve the best of the harvest for what he has given during his long and difficult period of his service in the Government sector. I pray the Almighty for the better healthy and wealthy life for Mr.Uthayakumaran, the retired Principal of Kn/Pallai Central College – National School.

**N.Kandathasan**
**Deputy Director of Education (Administration)**
**Provincial Department of Education, Northern Province.**

## கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அவர் பளை மத்திய கல்லூரியில் மிகவும் சவாலான காலத்தில் சேவையாற்றிய பெருமைக்குரியவர் க.உதயகுமாரன். உலகமே கொரோனா தொற்றினால் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் பல மாற்றுவழிகளைக் கையாண்டு கல்லூரியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றமை அவரது சந்தர்ப்ப முகாமைத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவரது காலத்தில் சாரணியம் புத்துயிர் பெற்று கல்லூரி வரலாற்றில் அதற்கென ஒரு வரலாற்றை பதிவு செய்தமையை யாவரும் மறுக்க முடியாது.
ஆளுமைமிக்க அதிபர் திரு.க.உதயகுமாரன் அவர்கள் பளை மத்திய கல்லூரியின் வரலாற்றிலே பேசப்படும் அதிபராக திகழ்வார் என்பதில் ஐயமில்லை. இத்தகைய பெருமைக்குரிய அதிபர் அவர்கள் ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியத்துடனும் அமைதியாக, சந்தோசமாக இனிய வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு.அருளானந்தம் சிவனருள்ராஜா**
**வலயக்கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி வடக்கு வலயம்.**

## தமிழ்த் தாய் பெற்றெடுத்த தங்கமகன உதயகுமாரன்



பளை மண்கண்ட பெருந்தகையாளன். பளை மகாவித்தியாலயம் எனும் கிணற்றின் ஊற்றுக்களாய் இணைந்தோம். நாம் பள்ளிப் பருவத்தில் நண்பர்களாய் பரவவிட்டீர். சுலப மாய் விடை கண்டு சீரமைத்தீர். கணிதத் துறை தனில் உமது திறமையை அன்றே கண்டோம். உமது விடா முயற்சி உழைப்பதை துள்ளித்திரிகின்ற வேளையிலே பள்ளிக்கு வந்த சிறார்களுக்கு கல்வி உலகைக்காட்டிடச் செதுக்கிய சிற்பி நீர். கடமையைக்கண்ணியமாக்கி காலத்தைப் பொன்னாக்கி ஆசிரியப் பணியின் மேலான பதவியாம் அதிபர் தரம் பெற்றீர். 2000 இல் பெற்றதாயும் பிறந்த ஊரும் என்றென்றும் நினைவுக்குரியதெனும் பொன்னான வாக்கு வளமிட்டதுபோல் காலச்சுழற்சியில் வளம்கண்ட பளை மகாவித்தியாலயம் பளை மத்திய கல்லூரியாய் மிளிர்ந்து நிற்க நீரோ ஊர்ப்பற்றால் உயர் அதிபர் பதவி பெற்று இறுதி மூவாண்டில் கற்ற கல்லூரிக்கு அதிபராய் பிரகாசித்தீர். சூரியனாய் சுடர்விடும் திசையெலாம் ஒளிபரவும் என்பது போல் நீர் பார்த்த பாடசாலைப் பணிகள் எல்லாம் பசுமையாய் ஆலமர விழுதுகளாய் எத்திசையும் கண்ணுக்கு வளம்காட்டி, உணர்வுக்கு உரமூட்டி, உற்ற நட்புக்கு கரம் கோர்த்து காலம் எல்லாம் கண்டிடுவோம் வளர்ச்சியினை நண்பா.

**திரு.க.தெய்வேந்திரம், செயலாளர்**
**நிதித்திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**வடமாகாணம்.**

## பிரதி அதிபரின் வாழ்த்துரை...



திரு.க.உதயகுமாரன் அவர்கள் கடமையாற்றிய காலப்பகுதியில் குறிப்பாக பாடசாலையில் பௌதீக வளத்தை மேம்படுத்துவதில் அயராது பாடுபட்ட அதிபராக காணப்படுகிறார். அத்துடன் கிளி/பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஆனது இவரது காலப்பகுதியில் தான் தேசிய பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இவரது ஆளுமையின் வெளிப்பாட்டிற்கு ஒரு சிறந்த உதாரணம் ஆகும். மேலும் நான்கு வருடங்களுக்கு மேலாக நடைபெறாது காலம் தாழ்த்தப்பட்ட பாடசாலைப் பரிசில் தின நிகழ்வை ஒரே தடவையில் நடத்திய பெருமையும் இவரையே சாரும். அதிபர் திரு.க.உதயகுமாரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் ஓய்வின் பின்னர் உடல் உள சுகத்துடன் நீண்ட நாள் வாழ்ந்து சமூகத்துக்கு சேவையாற்ற வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**திரு.க.ருகுணன், பிரதி அதிபர்**
**கிளி/பளை மத்திய கல்லூரி,**
**(தேசிய பாடசாலை).**

(C-5849)

**விழாக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
# யாழ்.மாநகர சபை வேட்பாளராக தீபன் திலீசன்

(அராலி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகர சபையின் முதன்மை வேட்பாளராக தீபன் திலீசன் போட்டியிடவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் மத்திய குழுவில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் நீண்டகாலமாக கட்சியுடன் இணைந்து செயற்படுவதாகவும் முக்கியமான கால கட்டத்திலும் கட்சியுடன் இணைந்து பயணித்ததன் அடிப்படையில் மத்திய குழுவில் யாழ். மாநகர சபையின் முதன்மை வேட்பாளராக அவர் களமிறக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-104)



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய வைரவிழாவும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிவநெறிப்புரவலர் விருது தயா அச்சகம் தயா வெளியீட்டு உரிமையாளர் வி.தயாபரனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

## சிவபூஜா மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையின் சிவபூஜா மாநாடு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் 11 மணி வரை பேரவை நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு குறித்த மருத்துவமனை மண்டபத்தில் வை. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது என அச்சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)



தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் நிலவும் மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனைக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 7 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய மருந்து வகைகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம் - சிவசாந்தன்)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மக்கி மண் மற்றும் சுண்ணாம்புக்கற்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளை மறுதினம் காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மக்கி மண் மற்றும் சுண்ணாம்புக்கற்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மக்கி மண் மற்றும் சுண்ணாம்புக்கற்கள் என்பவற்றை அன்றைய தினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு திருஊஞ்சல் நடைபெற்று அம்பாள் வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-6)


# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்


(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் (வடமாகாணம்) வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர் சேவை நிலையம் சுன்னாகத்தில் தலைவர் ச. ஞானகணேசன் தலைமையில் நடைபெறும்.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறும்.

எனவே இலங்கையின் மின்சார சபையில் ஓய்வு பெற்ற புதிய உத்தியோகத்தர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (4)





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினரால் அறநெறி மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் புனருத்தாரனம் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாற்றும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை மகாகும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (4-6)

# இராசிபலன்

26.01.2023
தை 12, வியாழக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.18 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 1.28 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-03.36 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம், பூரம்

வளவன்




வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசங்கள் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.





வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.





புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.





கோரிக்கைகள் நிறைவேறும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.





பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும். போசன சுகமுண்டு.




பாசமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

பிறரை விமர்சிக்கும் மனிதன் தன் குறைகளை வெளிப்படுத்துகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோயாளிகளுக்கான மருந்து இந்தியாவிலிருந்து கொள்வனவு

(கொழும்பு)

இருதய நோயாளிகளின் சிகிச்சைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் எனொக்சபாரின் சோடியம் மருந்தை கொள்வனவு செய்வதற்காக இந்திய உற்பத்தி மற்றும் விநியோகஸ்தர்களிடம் விலைமனு கோருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இருதய நோயாளர்களுக்கான சிகிச்சைக்காக பெற்றுக் கொள்ளப்படும் மேற்படி மருந்தில் 80,000 மாத்திரைகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாடளாவிய அரசாங்க மருத்துவமனைகளில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

நீரிழிவு நோயாளர்களுக்கான மருந்து உட்பட பல்வேறு மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

தூரப்பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகள் மட்டுமன்றி கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் அவ்வாறான மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கையும் இந்தியாவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை இந்தியா 2047 ஆம் ஆண்டிலும் இலங்கை 2048 ஆம் ஆண்டிலும் கொண்டாடவுள்ள நிலையில் இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிக முக்கியம் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்தியாவின் 74 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலே இந்திய உயர் ஸ்தானிகர் இதனை தெரிவித்தார். (நி)

# திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி முன்னேற்பாட்டு கலந்துரையாடல்

(மன்னார்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சிவராத்திரி தினத்தை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்டான்லி டி மேல் தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இம்முறை சிவராத்திரி தினம் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களின் ஒன்றுகூடலுடன் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தில் பல இலட்சம் யாத்திரிகர்கள் வருகை தர உள்ள நிலையில் ஏற்பாடுகள் முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னாயதங்களும் குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, குடிநீர் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை மற்றும் அதன் பிரதிநிதிகள், அரச, தனியார் திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸார், இராணுவ உயர் அதிகாரிகள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (4-6-285)

# 1,105 கிலோ பீடி இலைகள் மீட்பு



(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 1,105 கிலோ பீடி இலைகள் நீர்கொழும்பு துன்ஹல்பிட்டிய களப்பு பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு துன்ஹல்பிட்டிய களப்பு பிரதேசத்தில் இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் அதிகாலையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையிலேயே, இவை கைப்பற்றப்பட்டன. இவற்றைக் கடத்தி வந்த இரண்டு சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டனர். . (நி)

# சர்வமத ஒன்றிப்பே சமாதானத்தின் முதற்படி

CARITAS HUDEC

கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் **"இலங்கையில் அனைத்து மதங்களுக்கிடையில் சகிப்புத் தன்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான பொதுவான பார்வையை ஊக்குவித்தல்"** எனும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த 2022 ஆம் ஆண்டில் சர்வ மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பல செயற்றிட்ட செயற்பாடுகள் இயக்குநர் அருட்தந்தை செபஜீபன் அடிகளார் அவர்களின் தலைமையின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளன.



சர்வமத ஒன்றிப்பின் மூலமே நாட்டின் சமாதானத்தை அடைய முடியும் எனும் நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட இச்செயற்றிட்டத்தில் முதல் கட்ட நடவடிக்கையாக ஆறு கிராமங்களில் பிரதிநிதிகள் மற்றும் கிராம மட்ட சிறுவர்கள், இளைஞர்கள், பிரதேச மட்ட சர்வமத மேம்பாட்டுக் குழுக்கள் நிர்ணயிக்கப்பட்டு சர்வமதங்களை வலுப்படுத்தல் எனும் நோக்கில் அவர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

சமாதானம் மிக்க சமுதாயத்தை உருவாக்க பாடசாலை ஆசிரியர்கள் ஊடாக மாணவர்களிடம் சமாதான சகவாழ்வு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதானம் மிக்க சமூகத்தை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு வழங்கும் செயற்பாடு வழங்கப்பட்டது.



கரித்தாஸ் வன்னி கியூடெக் சர்வமத நல்லிணக்கத்தை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சர்வமத அங்கத்தவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டமான உலர் உணவுப் பொருட்கள், மருந்துவ உதவிகள் மற்றும் கல்வி உதவிகள் என்பன இத்திட்டத்தில் செயற்படுத்தப்பட்டன.

சர்வமத சகவாழ்வு அரங்கத்தின் சர்வமதத் தலைவர்களின் வெளிக்கள ஒன்றுகூடலும் வெளிக்கள தரிசிப்பும் பல சமயத் தலைவர்களினுடைய மக்கள் சந்திப்புக்களால் மத விழுமியங்கள் பகிரப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் நல்லுறவு பாலத்தினை வலுப்படுத்தும் முகமாகவும் அமைந்தது.



சமய கலாசார நிகழ்வுகளும் விசேட தினங்களில் கலை நிகழ்வுகளும் கலாசார பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மூலம் கிராம மக்கள் ஒன்றிணைந்து சர்வமத நல்லுறவை பலமாக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

சர்வமத சகவாழ்வின் சர்வ மதகுருமார்களின் ஒன்றுகூடலும் வெளிக்கள தரிசிப்பும் சமயத் தலைவர்களினுடைய ஆலோசனைத் தீர்மானம் எடுப்பதிலும் பல்துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்றும் செயற்பட்டு வருகின்றது.

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களுடனும் சர்வமத செயற்பாடுகள் வெளிக்கொணரப்பட்டதுடன் கிளி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் மத நல்லிணக்கம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

கரித்தாஸ் வன்னி கியூடெக்கின் நிறுவனப் பொதுப் பணிகளாக சர்வமதக் குழுவினரின் 2022 ஆம் ஆண்டுக்கான சர்வமத ஐக்கிய ஒளி விழா கரித்தாஸ் வன்னி கியூடெக்கில் இடம்பெற்றது. கலை நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சர்வமதக் குழுவினரும் மதத் தலைவர்களும் பங்குபற்றினர்.

(நி-5848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 86





அந்தத் தனிமை மிகுந்த கனாந்தகாரத்தினிடையே வானத்து நட்சத்திரங்கள் அவனுடன் நட்புரிமை கொண்டாடுவதுபோல் தோன்றின. எனவே, ஆழ்வார்க்கடியான் மரக்கிளைகளின் வழியாக எட்டிப் பார்த்த நட்சத்திரங்களைப் பார்த்து மெல்லிய குரலில் பேசினான்.

"ஓ! நட்சத்திரங்களே! உங்களை இன்றைக்குப் பார்த்தால் பூவுலக மக்களின் அறிவீனத்தைப் பார்த்துக் கேலி செய்து கண்சிமிட்டிச் சிரிப்பவர்களைப் போலத் தோன்றுகிறது. சிரிப்பதற்கு உங்களுக்கு வேண்டிய காரணம் உண்டு.

நூறு வருஷத்துக்கு முன்னால் இதேஇடத்தில் நடந்த பெரும் போரையும் போர் நடந்த பிறகு இங்கே வெகு நாள் வரை இரத்த வெள்ளம் பெருகிக் கிடந்ததையும் பார்த்திருக்கிறீர்கள்.

மனிதர்கள் எதற்காக இப்படி ஒருவரையொருவர் பகைக்க வேண்டும் என்று அதிசயிக்கிறீர்கள். எதற்காக இப்படி மனித இரத்தத்தைச் சிந்தி வெள்ளமாக ஓடச் செய்ய வேண்டும் என்றும் வியக்கிறீர்கள் இதற்குப் பெயர் வீரமாம்.

"ஒரு மனிதன் இறந்து நூறு வருஷம் ஆகியும் அவனிடம் பகைமை பாராட்டுகிறார்கள்! இந்தப் பள்ளிப்படை பகைவனுடைய பள்ளிப்படையாம்! பகைவன் பள்ளிப்படைக்கு அருகில் கூடி யோசிக்கப் போகிறார்களாம். செத்துப் போனவர்களின் பெயரால் உயிரோடிருப்பவர்களை இம்சிப்பதற்கு! வானத்து விண்மீன்களே! நீங்கள் ஏன் சிரிக்க மாட்டீர்கள்? நன்றாய்ச் சிரியுங்கள்!

"கடவுளே! இங்கு வந்தது வீண் தானா? இன்றிரவெல்லாம் இப்படியே கழியப் போகிறதா? எதிர் பார்த்த ஆட்கள் இங்கே வரப்போவதில்லையா? என் காதில் விழுந்தது தவறா? நான் சரியாகக் கவனிக்கவில்லையா? அல்லது அந்த மச்ச ஹஸ்த சமிக்ஞையாளர்கள் தங்கள் யோசனையை மாற்றிக் கொண்டு வேறிடத்துக்குப் போய் விட்டார்களா! என்ன ஏமாற்றம்? இன்றைக்கு மட்டும் நான் ஏமாந்து போனால் என்னை நான் ஒரு நாளும் மன்னித்துக் கொள்ள முடியாது! ஆ! அதோ சிறிது வெளிச்சம் தெரிகிறது! அது என்ன? வெளிச்சம் மறைகிறது மறுபடி தெரிகிறது சந்தேகமில்லை.

அதோ, சுளுந்து கொளுத்திப் பிடித்துக் கொண்டு யாரோ ஒருவன் வருகிறான்! இல்லை இரண்டு பேர் வருகிறார்கள் காத்திருந்தது வீண் போகவில்லை!"

வந்தவர்கள் இருவரும் பள்ளிப்படையைத் தாண்டிக் கொண்டு சிறிது அப்பால் போனார்கள். அடர்ந்த காட்டுக்கு மத்தியில் சிறிது இடைவெளி இருந்த இடத்தில் நின்றார்கள். ஒருவன் உட்கார்ந்து கொண்டான் கையில் சுளுந்து வைத்திருந்தவன் சுற்றும் முற்றும் பார்த்து கொண்டிருந்தான்.

யாருடைய வரவையோ அவன் எதிர்பார்த்தான் என்பதில் சந்தேகமில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் இதற்கு முன் இந்த இடத்துக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் இந்த இருளில், அடர்ந்த காட்டில், வழி கண்டு பிடித்துக் கொண்டு வர முடியுமா?

முதலில் வந்தவர்களும் பின்னால் வந்தவர்களும் ஏதோ பேசிக் கொண்டார்கள். ஆனால் ஆழ்வார்க்கடியான் காதில் அது ஒன்றும் விழவில்லை. 'அடடா, இத்தனை கஷ்டப்பட்டு வந்தும் பிரயோஜனம் ஒண்ணும் இராது போலிருக்கிறதே! ஆட்களின் அடையாளம் கூடத் தெரியாது போலிருக்கிறதே!'


பிறகு இன்னும் இரண்டு பேர் வந்தார்கள் முன்னால் வந்தவர்களும் கடைசியில் வந்தவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். கடைசியாக வந்தவர்களில் ஒருவன் கையில் ஒரு பை கொண்டு வந்திருந்தான். அதை அவன் அவிழ்த்து அதனுள் இருந்தவற்றைக் கொட்டினான். சுளுந்து வெளிச்சத்தில் தங்க நாணயங்கள் பளபள வென்று ஒளிர்ந்தன.

கொட்டிய மனிதன் பைத்தியம் பிடித்தவனைப் போல் சிரித்து, "நண்பர்களே! சோழ நாட்டுப் பொக்கிஷத்தைக் கொண்டே சோழ இராஜ்யத்துக்கு உலைவைக்கப் போகிறோம்! இது பெரிய வேடிக்கையல்லவா?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் கலகலவென்று சிரித்தான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### நொண்டிக் குதிரை

இந்த ஏரியிலே இறங்கித் தண்ணீரை இப்படியும் அப்படியும் கலக்கினால் உபத்திரவம் தாங்காமல் குதிரை ஓடி வருமே! தண்ணீரை விட்டு வெளியே வந்தால் எல்லோரும் சேர்ந்து சுலபமாகப் பிடித்துவிடலாமே!"

என்றார் குருதேவர். "இதெல்லாவற்றையும் விடச் சுலபமான வழி ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்" என்று உரத்த குரலில் ஆரம்பித்தான் மிலேச்சன்.

"தண்ணீருக்குள் இருக்கிற மீனைத் தூண்டிலில் போட்டு உள்ளே பிடிக்கிறார்கள்? ஆகவே தண்ணீருக்குள் இருக்கிற இந்தக் குதிரையையும் தூண்டிலில் போட்டே பிடித்துக் கரையில் இழுத்து விடலாம்" என்றான் அவன் கடைசியாக எல்லோருக்கும் தூண்டில் யோசனையே சரி என்று தோன்றியது.

தூண்டில் போட்டுக் குதிரையைப் பிடிக்க முடிவு கட்டியபின், அவர்கள் தூண்டிலைத் தயார் செய்ய முனைந்தார்கள். தங்களிடமிருந்த ஒரு கருக்கரிவாளை எடுத்து அதைத் தூண்டில் முள்ளாகப் பயன்படுத்தவும், தங்களிடம் உள்ள கட்டுச் சோற்றைக் கட்டி அதைத் தூண்டில் முள்ளின் முனையில் இரையாகப் பயன்படுத்தவும் குருநாதர் தம் கரத்தில் தாங்கி நடக்கும் ரிஷப முகமும் பித்தளைப் பூணும் பொருந்திய தடியைத் தூண்டில் கோலாகப் பயன்படுத்தவும் திட்டமிட்டுச் செயற்பட்டார்கள்.

அவ்வாறே அவர்கள் புதுமையாகத் தூண்டிலை அமைத்து அதை நீரில் குதிரை உருவம் தெரிந்த இடத்தில் வீசினார்கள். அவர்கள் வீசிய விசையினால் தண்ணீர் கலைந்து அலைந்தது.

அப்போது அந்தக் குதிரையுந் துள்ளி எழுந்து உடலை நெளித்துக் குதித்து வேகமாக எழும்பியதைப் போல் அவர்களுக்குத் தோன்றியது. அவர்கள் உடல்கள் நடுங்க அங்கிருந்து ஓட்டமாக ஓடிப் போனார்கள்.

ஆனால் தூண்டிலைத் தண்ணீரில் போட்டுவிட்டு முனையைத் தன் கையில் பிடித்திருந்த மட்டி மட்டும் தன் பிடிப்பை விடாமல் எப்படியோ அங்கேயே தைரியமாக அமர்ந்திருந்தான்.

சிறிது நேரத்தில் ஏரி நீரில் அசைவு ஏதும் இல்லாமல் அமைதியாக இருந்தது. தூண்டில் கோல் மட்டும் இலேசாக இழுப்பதைப் போல் தோன்றியது மட்டிக்கு. முனையில் கட்டியிருந்த கட்டுச் சோற்றை, தண்ணீரிலிருந்த மீன்கள் கடித்து இழுத்துக் கொண்டிருந்தன.

குதிரை தான் தூண்டிலில் சிக்கிக் கொண்டு விட்டது என்று நினைத்து மட்டி மெதுவாகக் கையை உயர்த்தி, கரையிலிருந்தவர்களை அருகே சைகையால் அழைத்தான். அவர்கள் அருகே வந்ததும் "குதிரை இப்போது தான் இரையைக் கடிக்கத் தொடங்குகிறது என்றான் இரகசியக் குரலில்.

சற்று நேரம் பொறுத்து, தூண்டிலை மேலே இழுத்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத் தான் அழைத்துச் செல்லும். – கவி தாம்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆளுநர் அலுவலகம் நடத்தும் சங்கீதக் கதிரைப் போட்டி

மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வாக சங்கீதக் கதிரைப் போட்டி நடத்துகின்ற வழமை நம்மிடம் உண்டு.

பார்வையாளர்களுக்காக அல்லது நடுவர்களுக்காக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்படுவது வழக்கம்.

கதிரைகளை வட்டமாக அடுக்கி, இசை ஒலிக்கப்படும். போட்டியாளர்கள் கதிரைகளை வலம்சுழியாகச் சுற்றி வருவர்.

போட்டியாளர்களின் எண்ணிக்கையை விட, ஒரு கதிரை குறைவாகக் காணப்படும்.

இசை நிறுத்தப்பட்டதும் சுற்றுவழிப்பாதை வழியாக கதிரைகளில் அமர்ந்து கொள்ள, ஆசனம் கிடைக்காத போட்டியாளர் களத்தினின்று வெளியேறுவார்.

மீண்டும் ஒரு கதிரை குறைக்கப்பட்டு இசை மீட்கப்படும்.

இது எல்லோருக்கும் தெரிந்த விடயமாயினும், இங்கு கவனிக்கப்பட வேண்டியது இசை எப்போது நிறுத்தப்படும் என்பதுதான்.

இசை குறித்து அவதானிப்போடு செயற்பட்டால், சங்கீதக் கதிரைப் போட்டியில் பரிசைத் தட்டிக் கொள்ள முடியும்.

எனினும் இசைப் பேழையை இயக்குபவர் போட்டியாளர்களைப் பார்க்காமல் தனது பணியை ஆற்றுவது மிகவும் முக்கியம்.

இதை நாம் கூறும்போது, அது சரி சங்கீதக் கதிரைப் போட்டி இப்போது எதற்கு? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், எங்கள் வடக்கு மாகாணத்தில் இப்போது செயலாளர்களுக்கு சங்கீதக் கதிரைப் போட்டிதான் நடக்கிறது.

இந்தப் போட்டிகளை வடக்கு மாகாண ஆளுநர் நடத்துகின்றார் என்று கூறலாம்.

ஆம், மாகாண அமைச்சுக்குச் செயலாளர்களை நியமிப்பது பின்னர் அவர்களை இடமாற்றம் செய்வது, சிரேஷ்ட செயலாளர்களை வடக்கு மாகாணத்துக்கு வெளியில் இடமாற்றுவது என ஒரே குழப்பம் நடந்த வண்ணமுள்ளது.

எதற்கு நியமிக்கிறார்கள். எதற்கு மாற்றுகிறார்கள் என்பதே தெரியாமல் செயலாளர்களுக்கான இடமாற்றம் மிகக் குறுங்காலத்திற்குள் நடந்து கொண்டே இருக்கிறது.

இதைப் பார்க்கும்போது வடக்கு மாகாணத்தில் இலங்கை நிர்வாக சேவையில் இருப்பவர்கள் தங்கள் அளவிலேனும் ஒற்றுமைப்பட்டு இயங்கவில்லை போல தெரிகிறது.

ஆம், வட மாகாணத்தில் மிகச் சிறப்பாகச் சேவையாற்றிய செயலாளர்களை வடக்கு மாகாண ஆளுநர் வெளியில் இடமாற்றம் செய்யும்போது, அது அநீதியானது. எங்கள் வட மாகாணத்துக்கு அனுபவம்மிக்கவர்கள் தேவை என்பதை இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் கூட்டாகச் சென்று ஆளுநரிடம் எடுத்துரைத்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

நடக்க வேண்டியது நடக்காததால் இப்போது வடக்கு மாகாணச் செயலாளர்களுக்கு அடிக்கடி இடமாற்றம் வழங்கப்படுகிறது.

நிர்வாக ஒழுங்கைப் பொறுத்தவரை இது வடக்கு மாகாணத்தின் செயலொழுங்குக்கு அவ்வளவு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஏனெனில், இடமாற்றம் வழங்கப்பட்டவர்கள் அந்தப் பதவியில் எத்தனை மாதம் அமர்ந்திருப்பர் என்பது ஆளுநர் தவிர்ந்த எவருக்கும் தெரியாததல்லவா.

அதுதான் சொன்னோம் அடிக்கடி செயலாளர்களை இடமாற்றுவது ஆரோக்கியமல்லவென்று.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் கருத்து கூற விரும்பவில்லை

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

இந்த நேரத்தில் தேர்தலை நடத்துவது ஏற்புடையதா? இல்லையா? என்பது மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயம் அல்ல என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

தேர்தலை நடத்துவது ஏற்புடையதா இல்லையா என்பது பற்றி நாங்கள் கருத்து கூற விரும்பவில்லை. அது எமக்கு சம்மந்த மில்லை. மத்திய வங்கியானது நாட்டின் நிதிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்.

தேர்தல் எமது விடயத்துக்கு புறம்பானது என்று அவர் குறிப்பிட்டார். (ம-7)

# மக்களை சட்டவிரோதமாக சிறையில் அடைக்க இது சர்வாதிகார நாடல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மக்களை சட்டவிரோதமாக சிறையில் அடைக்க இது சர்வாதிகார நாடு அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க மற்றும் ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற் சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித ஆகியோரை பார்வையிடும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வரிச்சுமை அதிகரித்து, மின் கட்டணமும் அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநாட்ட முடியாத நிலையில் இந்நாட்டின் துன்பப்படும் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை மிகுந்த வேதனையளிக்கிறது.

சிறைப்படுத்தப்பட்டுள்ள ஆனந்த பாலித மற்றும் சஞ்சீவ தம்மிக்க ஆகியோருக்கு இந்நாட்டின் நீதித்துறை ஊடாக நீதி கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின் கட்டண உயர்வுக்கு எதிராகவும், எரிசக்தி துறையில் நிலவும் ஊழலுக்கு எதிராகவும், தற்போதைய அரசின் ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராகவும் அவர்கள் முன் நின்று குரல் எழுப்பினர் எனவும், அவர்கள் எந்த வன்முறை நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை எனவும், அரசியலமைப்பு வழங்கிய பேச்சுரிமையை அவர்கள் பயன்படுத்தியதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மக்களை சட்டவிரோதமாக சிறையில் அடைக்க நம்நாடு ஒரு சர்வாதிகார அல்லது ஏதேச்சதிகார நாடல்ல எனவும், இது ஓர் ஜனநாயக நாடு எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இவ்விரு வரினது ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க, ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும் எனவும், அவர்களின் விடுதலைக்காக சாத்தியமான அனைத்து அமைதியான, ஜனநாயக மற்றும் சட்ட ரீதியிலான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தான் முன்நிலை வகிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

## 18 வயது இளைஞன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 18 வயது இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அந்த பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை 18 வயது இளைஞன் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்த நிலையில் குறித்த இளைஞன் தலைமறைவாகியிருந்தார்.

இதனையடுத்து தலைமறைவாகிய இளைஞனை பொலிஸார்தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனை கைது செய்துள்ளனர். (ம-7)

# நிலக்கரி இறக்குமதிக்கு இரு வங்கிகளுடன் பேச்சு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரி இறக்குமதிக்கு நிதியளிப்பதற்காக இரண்டு அரச வங்கிகளிடம் கடன் பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

அடுத்த மூன்று மாதங்களில் 21 கப்பல்களிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனவரி வரும் என எதிர்பார்க்கப்பட்ட 7 நிலக்கரி கப்பல்களில் 5 கப்பல்கள் வந்துள்ளது என்றும் மீதமுள்ள இரண்டு கப்பல்கள் இம் மாதத்திற்குள் வரும் என்றும் அவர் கூறினார்.

வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் வசதிகளின் அளவுக்கேற்ப இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் என தெரிவித்தார்.

இதனை கொண்டு குறைந்தளவிலான மின்சார துண்டிப்போடு மின்சாரம் வழங்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பேருந்தில் சிக்குண்டு 6 வயது சிறுமி பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - பரசங்கஸ்வெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்தில் பயணித்த குறித்த சிறுமி, முன்பக்க கதவின் ஊடாக கீழே இறங்க முற்பட்ட போது கீழே விழுந்து பேருந்தில் சிக்குண்டுள்ளார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த சிறுமி அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அளுத்கம, தாருசலாம் முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் முதலாம் ஆண்டில் கல்விகற்றுவந்த, கம்பிரிகஸ்வெவ பிரதேசத்தில் வசித்து வந்த 6 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பரசங்கஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உரிய வாழ்விட வசதிகளின்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த பல ஆண்டுகளாக தற்காலிக கொட்டகைகளில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.**



தொடர் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு மீள் குடியேறி வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு கடந்த 2018 ஆம் 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் எந்த வீட்டுக்கும் முழுமையான நிதி வழங்கப்படாது முதற்கட்ட, இரண்டாம் கட்ட பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரமே கிடைத்துள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த வீட்டுத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவுறுத்த வேண்டும் என்ற அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக விரைவாக கட்டி முடிக்க பெரும் சவால்களை சந்தித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது குறிப்பிட்ட காலத்துக்குள் வீட்டுத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக தங்களிடமிருந்த நகைகள் பொருட்களையும் விற்றும் வங்கிகளில் கடன் பெற்றும் அதற்கு மேலாக நுண்நிதி நிறுவனங்களிடம் இருந்தும் பெருந் தொகையான கடன்களை பெற்று இந்த வீடுகளை கட்டுவதற்கு கஸ்டங்களை எதிர் நோக்கியதாகவும் ஆனால் இந்த வீடுகளுக்கு முதல்கட்ட கொடுப்பனவு மற்றும் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய கொடுப்பணவுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான முழுமையான நிதி வழங்கப்படாத நிலையில் 11 ஆயிரத்து 829 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (4-6-315)

# வீதி செப்பனிடப்படாததால் போக்குவரத்து பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி இதுவரை சொப்பனிடப்படாததால் மக்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்த வீதியில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமையினால் வேரவில் மருத்துவமனைக்கு மருத்துவர்கள் சென்று வருவதற்கும் அங்கிருந்து அவசர நோயாளிகளை முழுங்காவில் மருத்துவமனைக்கோ அல்லது கிளிநொச்சி மருத்துவமனைக்கோ அல்லது பிற மருத்துவமனைகளுக்கோ கொண்டு செல்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையினால் குறித்த பிரதேசத்திலிருந்து சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டநோயாளிகள் பலர் இடைநடுவில் உயிரிழந்ததாகவும் கிராம வாசிகள் தெரிவித்துள்ளனர்.

புனரமைப்பு பணிகள் கைவிடப்பட்டுள்ளதால் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக இவ் வீதியின் மூன்று இடங்களில் வெள்ள நீர் குறுக்கறுத்து பாய்ந்ததுடன் நீண்ட நாட்களுக்கு வெள்ளமும் தேங்கி காணப்பட்டது.

இந்தப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் உழவு இயந்திரங்களிலேயே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# மாரடைப்பு ஏற்பட்டதே உயிரிழப்பிற்கு காரணம்

## உறவினர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அராலியில் கடந்த 18 ஆம் திகதி சாரதி ஒருவர் ஓய்வெடுப்பதற்காக தென்னை மரத்தின் கீழ் படுத்து உறங்கிக்கொண்டிருந்த வேளை தேங்காய் ஒன்று அவரின் நெஞ்சில் விழுந்து அவர் உயிரிழந்து விட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த நபர் தேங்காய் விழுந்ததால் உயிரிழக்கவில்லை எனவும் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள்ளாரென மருத்துவர்கள் தெரிவித்தாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.(4-6)

# இருபது வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

(அராலி)

யாழ். மாநகரசபை பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு வர்த் தக நிலையங்கள் கிரம மாக ஒவ்வொரு மாதமும் யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் பரி சோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த டிசெம்பர் மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும் ஜனவரி மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளிலும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது காலாவதியான உணவுப் பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய முறையில் சுட்டுத்துண்டு இடப்படாத உணவுப் பொருட்கள் மற்றும் வண்டு மொய்த்த உணவு பொருட்கள் என ஏராளமான மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் மாநகர சபைக்கு உட்பட்ட யாழ்.நகர், நல்லூர், வண்ணார்பண்ணை பொதுச்சுகாதார பிரிவுகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட உணவு பொருட்களை நீதிமன்றில் ஒப்படைத்த பொது சுகாதார பரிசோதகர்கள் 20 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்குகள் நேற்று மேலதிக நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது கடை உரிமையாளர்கள் அனைவரும் குற்றத்தை ஏற்று கொண்டனர்.

இதனையடுத்து 20 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் மொத்தமாக 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (4-6-104)

# வவுனியாவில் இன்று, நாளை மாபெரும் வர்த்தக சந்தை

(நெளுக்குளம்)

சிறுதொழில் முயற்சியாளர்களிற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக வட மாகாண தொழிற்திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் வர்த்தக சந்தை நிகழ்வு வவுனியாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

குறித்த நிகழ்வானது வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று மற்றும் நாளை காலை 9 மணிமுதல் இரவு 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(4-6-299)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 350 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 220 | 200 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 150 | 150 | 180 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 400 | 600 | 550 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 180 |
| பாகற்காய் | 200 | 260 | 280 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 250 | 200 | 350 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 500 | 600 | 400 | 300 |
| லீக்ஸ் | 420 | 250 | 300 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 250 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 600 | 1200 | 1600 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 100 |
| தேசிக்காய் | 40 | 80 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 | 320 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 450 |
| முள்ளங்கி | 40 | 100 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 160 | --- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 அத்தியாவசிய...

விலை குறைக்கப்பட்ட பொருட்களின் பட்டியல்:

காய்ந்த மிளகாய் 1 கிலோ ரூ.1,700, வெள்ளை அரிசி (உள்நாடு) 1 கிலோ ரூ.169, சிவப்பு அரிசி 1 கிலோ ரூ.179, வெள்ளை நாடு (உள்ளூர்) 1 கிலோ ரூ.184, சிவப்பு பருப்பு 1 கிலோ ரூ.365, கீரி சம்பா 1 கிலோ ரூ.235 (ம-7)

## வவுனியாவில்...

வந்துகொண்டிருந்த கன்ரர் வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் ரங்கெத்கம பகுதியை சேர்ந்த நந்தன கிருசாந்த (வயது - 41) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)

## சர்வகட்சி...

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் இன்று மாலை 4.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் சர்வகட்சிக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்த சர்வகட்சிக் கூட்டத்திற்கு சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க உட்பட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர், 2022 டிசம்பர் 13ஆம் திகதி அழைக்கப்பட்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நல்லிணக்க மேம்பாட்டுத் திட்டம் குறித்து இதன்போது மேலும் கலந்துரையாடப்பட்டு கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடும் எட்டப்படவுள்ளது. (ம-7)

## புற்றுநோயாளி...

மருந்துப் பற்றாக்குறையால் சுகாதாரப் பணிகள் முடங்கியதுடன், நோயாளிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும் தட்டுப்பாடு உள்ள மருந்துகளை கொள்வனவு செய்ய உத்தரவுகள் வழங்கப்படும்போதும் பணம் செலுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

இந்தியக் கடன் வரியின் கீழ் முன் பதிவு செய்யப்படும் புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் இன்னும் 15 நாட்களில் இலங்கையை வந்தடையும் என்று அவர் குறிப்பிட்டார்.

பற்றாக்குறையாக உள்ள எஞ்சிய மருந்துகளை இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (ம-7)

## தேர்தல்...

நேற்று முதல் ராஜினாமா அமுலுக்கு வருவதாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்.மாநகர...

பெப்ரவரி 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதால் எதிராளிகளை எதிர்வரும் 6ஆம் திகதி மன்றில் ஆஜராக அழைப்பாணை அனுப்புமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7,33,104)

## சரணடைந்த...

தகவல்களை வழங்குமாறு தெரிவித்து இராணுவத்திடம், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் கோரப்பட்ட போதிலும் கடந்த நான்கு வருடங்களாக பதில் எதுவும் வழங்கப்படவில்லை

இதனையடுத்து தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் இராணுவத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் படி எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இராணுவம் நேரடியாக ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

தகவலறியும் விண்ணப்பம் ஒன்றுக்கு 14 நாட்களுக்குள் பதில் வழங்கப்பட வேண்டும் என RTI சட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பரீ...

டிசம்பர் 18ஆம் திகதி நடைபெற்றது.

பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சை திணைக்கள இணையத்தளமான www. doe nets.lk என்ற இணையத்தளத்திலோ அல்லது, results.exams. gov.lk என்ற இணையத்தளத்திலோ பார்வையிட முடியும் என ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அல்லது எந்த கைத்தொலைபேசியிலும், exam இடைவெளி gv15 இடைவெளி, பரீட்சை சுட்டெண்ணை குறிப்பிட்டு 1919 அனுப்புவதன் மூலம் குறுஞ்செய்திகளின் மூலமாகவும் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும். (ம-7,33)

## மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள்

| வெட்டு புள்ளி மட்டம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 01. | கொழும்பு | 153 | 144 |
| 02. | கம்பஹா | 153 | 144 |
| 03. | களுத்துறை | 153 | 144 |
| 04. | கண்டி | 153 | 144 |
| 05. | மாத்தளை | 153 | 144 |
| 06. | நுவரெலியா | 147 | 142 |
| 07. | காலி | 153 | 144 |
| 08. | மாத்தறை | 153 | 144 |
| 09. | அம்பாந்தோட்டை | 150 | 140 |
| 10. | யாழ்ப்பாணம் | - | 143 |
| 11. | கிளிநொச்சி | - | 143 |
| 12. | மன்னார் | 145 | 142 |
| 13. | வவுனியா | 145 | 142 |

| வெட்டு புள்ளி மட்டம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 14. | முல்லைத்தீவு | 145 | 142 |
| 15. | மட்டக்களப்பு | - | 143 |
| 16. | அம்பாறை | 148 | 143 |
| 17. | திருகோணமலை | 147 | 142 |
| 18. | குருநாகல் | 153 | 144 |
| 19. | புத்தளம் | 148 | 142 |
| 20. | அநுராதபுரம் | 148 | 141 |
| 21. | பொலன்னறுவை | 148 | 142 |
| 22. | பதுளை | 148 | 142 |
| 23. | மொனறாகலை | 148 | 141 |
| 24. | இரத்தினபுரி | 150 | 142 |
| 25. | கேகாலை | 153 | 144 |

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 25/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1466
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 4 3 7 6 9 6
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.01.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1041
A 02 16 30 77
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி 2023.01.25 சீட்டிழுப்பு இலக்கம் 3253
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Y 28 35 51 71
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 25/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1359
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
R 05 10 11 36 60

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 320
வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள்
கும்பம் 16 20 22 27 கும்பம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/01/25
சீட்டிழுப்பு இலக்கம் 5011
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 2 9 3 8 9 5
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1986 / நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.25 / தினம் புதன்கிழமை
P 16 18 44 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,815,540/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

### சனிதா (Shanida)

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.25
சீட்டிழுப்பு இல : 4147
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,781,200/-
வெற்றி இலக்கங்கள் 11 36 47 52 ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 6,188,788/-
திகதி 2023-01-25
வெற்றி வாரம் 3698
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 11 23 24 53 துலாம்
ரூ.500/- பரிசுகளுக்கான 7083
ரூ.100/- பரிசுகளுக்கான 835
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 16,129,308/-

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 31 19 25 36 55
சீட்டிழுப்பு வாரம் 1162, வர்ணம் பச்சை, திகதி 2023.01.25 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 300,863,696.20
தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா (Jayoda)

சீட்டிழுப்பு வாரம் 1891
சீட்டிழுப்பு திகதி 2023-01-25
வெற்றி இலக்கங்கள் 12 13 15 67 ஆங்கில எழுத்து M
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 39,310,294/-
தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1812
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.01.25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,243,940/-
வெற்றி இலக்கங்கள் 11 26 42 62 ஆங்கில எழுத்து C

## NLB ஹந்தகன அதிர்ஷ்டம்

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பு விற்பனை செய்யப்பட்ட NLB **ராசி சுபபலன்** சீட்டிழுப்பு மூலம் 23.01.2023 அன்று **5 இலட்சம்** ரூபாய் ஒருவர் வென்றுள்ளார். **க.பிரதாஸ்** எனும் விற்பனை முகவரூடாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(C-5850)

**K.பிரதாஸ்**
சாவகச்சேரி.
**077 357 8224**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீற்றர் வட்டிக்கு பணம் பெற்றவர் மீது தாக்குதல்

## தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காட்ட பொலிஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்திய சம்பவத்துடன் தொடர்புடையோரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர்.

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்ற இருவரை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்து வந்து கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொளி காட்சி சமூக ஊடகங்களில் வைரலாகியது.

இந்த காணொளி தொடர்பில் வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்துபவர்கள் தொடர்பில் தகவல்தெரிந்தோர் வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7)


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இருவர் தங்க வசதியான சிறிய வீடு வாடகைக்கு தேவை. சிறிய கடை என்றாலும் போதுமானது.

**தொடர்புகளுக்கு :- 075 094 0114** (14401)


# அரசியலமைப்பு பேரவையின் சட்ட ஏற்பாடு தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

அரசியலமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் சபாநாயகரும், அரசியலமைப்புப் பேரவையின் தலைவருமான மகிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

அரசியலமைப்பு உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் ஊடாக அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பேரவையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அரசியலமைப்பின் 41 ஆ பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பது தொடர்பில் அரசியலமைப்புப் பேரவை கலந்துரையாடியிருந்ததுடன், பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக குறித்த ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு ஆர்வம் காட்டும் மற்றும் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்புரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நிதிஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்படும். விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும்.

பேரவையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை சுதந்திரமான முறையிலும், பொறுப்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசியலமைப்புப் பேரவை ஏகமனதாக இணங்கியது. (ம-7)

# சக கைதியை துஷ்பிரயோகம் செய்த மரணதண்டனை கைதி

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் நேற்று முன்தினம் பட்டப்பகலில் மற்றுமொரு கைதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கைதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் எல் வார்டில் உள்ள கழிவறையில் இந்த சம்பவம் நடந்தது.

ஊழல் செய்த குற்றச்சாட்டில் 6 வருட சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதியை கொலைச் சம்பவத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14393) **076 825 7716** (ஆகாஸ்)

**மணமகள் தேவை**

81 சதயம் 6 சூரியன் செவ்வாய் கனடா சிற்றிசன் மணமகன் இலங்கை வந்துள்ளார். படித்த மணமகள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.

**துர்க்கா திருமண சேவை**

**077 818 5978** –வைபர், வட்ஸ்அப் (14402)

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூர் பகுதியிலுள்ள வீட்டில் தங்கி நின்று வயதான பெண் ஒருவரை பராமரிக்க கூடிய பணிப் பெண் தேவை.

**தொடர்புகளுக்கு :-**
**077 913 4540**
**077 618 4524** (14397)


# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 25 - 02 - 1950

மறைவு 28 - 12 - 2022

## அமரர் நடராசா சிவரட்ணம்

[ஓய்வு நிலை உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி – வடமாகாணம், பொதுமுகாமையாளர் V2 Travls & Tours PVT LTD]

ஆதி கோவிலடி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், முருகையன் கோவிலடி வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 27.01.2023 வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறும். அந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளவும்)**

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

முருகையன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(C-5845)

-குடும்பத்தினர்
077 236 7407

# அருட்கலாநிதி எட்வின் சவுந்தரா



யாழ். மறைமாவட்ட குருவும் புன்னை நீராவியடி பிரதேசத்திலுள்ள ஆங்கில வளாகத்தின், இயக்குனரும் நிறுவுனருமான மல்லாகம் குளமங்காலைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்கலாநிதி எட்வின் சவுந்தரா அடிகளாரவர்கள் 13.01.2023 அன்று அமெரிக்காவில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதி அடக்கம் அமெரிக்காவில் 26.01.2023 இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது. அவரின் பூர்விக இடமான குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இறுதி மரியாதை திருப்பலி 28.01.2023 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபறட்ணம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நீண்ட பல ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995ற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டுக்குப்புலம் பெயர்ந்து அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் மறைமாவட்டத்தில் இணைந்து அங்கும் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

புலம்பெயர் தேசத்திலிருந்து நாடு திரும்பிவன்னிப் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு தனது முயற்சியினர்ல் பிரபந்தனாறு புன்னை நீராவி பிரதேசத்தில் ஆங்கிலக் கல்விக் கூடம் ஒன்றை நிறுவி ஆங்கிலக்கல்வியை கற்பித்து வந்தார். இங்கு பல மாணவர்கள் கல்வி பயின்று நல்ல நிலையில் உள்ளனர்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறுதிமரியாதை திருப்பலியில் பங்கெடுத்து மன்றாட உங்களை அழைத்து நிற்கின்றோம்.

தொடர்பு கொள்ள :- 077 930 4444 தகவல் :- குடும்பத்தினர் (14030)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org